# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2015 - 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. புறத்திணை நூல்களில் ஒன்று

அ) நற்றிணை ஆ) அகநானூறு

இ) புறநானூறு ஈ) குறுந்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. நாட்டிய அரங்கமாகத் தோன்றும் மருதத்தில் மயிலின் ஆடலைத் தலைநிமிர்ந்து பார்ப்பவை

அ) குயில்கள் ஆ) குவளைகள்

இ) முகில்கள் ஈ) வண்டுகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. முதலெழுத்துகளின் வகை

அ) மூன்று ஆ) நான்கு இ) இரண்டு ஈ) ஒன்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. வடவரசரை வென்று இமயவரம்பன் எனப் பெயர்பெற்றவன்

அ) சேரன்செங்குட்டுவன் ஆ) குலோத்துங்கன்

இ) கனகவிசயன் ஈ) நெடுஞ்செழியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. மொழிக்கு இறுதியில் வரும் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) நூறு ஆ) முப்பது இ) இருபது ஈ) இருநூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பின்வருவனவற்றுள் சார்பெழுத்து அல்லாதது

அ) க ஆ) ம இ) ச் ஈ) ஃ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. **அச்சம் என்பது மடமையடா....** என்னும் பாடலில் எதைக்காப்பது நமது கடமை என்கிறார் கவிஞர்

அ) பணத்தைக் காப்பது　　ஆ) தாய்நாட்டைக் காப்பது

இ) புகழைக் காப்பது　　ஈ) உறவைக் காப்பது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றியவினை

அ) படி　ஆ) தேடு　இ) இரு　ஈ) பார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இராப்பகல் என்பது

அ) தொடர்மொழி　　ஆ) நிலைமொழி

இ) பொதுமொழி　　ஈ) தனிமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. செவ்வழி முரல்வ சோலை என்ற பாடல் வரியில் செவ்வழி என்பது

அ) சாயுங்காலப்பண்　　ஆ) இரவுப்பண்

இ) மாலைப்பண்　　ஈ) காலைப்பண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கட்டினாள் என்ற சொல்லைப் பிறவினையாக மாற்றினால்

அ) கட்டுகிறான்　　ஆ) கட்டுவாள்

இ) கட்டுவித்தாள்　　ஈ) கட்டுகிறாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கூத்தர் என்பவர்

அ) இசைக்குலப் பெண்கள்　　ஆ) நடனக்குலப்பெண்கள்

இ) இசைக்குல ஆண்கள்　　ஈ) நடனக்குல ஆண்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பின்வருவனவற்றுள் வல்லினமெய்யெழுத்துக் கூட்டம்

அ) ங் ஞ் ண் ந் ம் ன் ஆ) ய் ர் ல் வ் ழ் ள்

இ) ய் ர் ம் ட் ஞ் த் ஈ) க் ச் ட் த் ப் ற்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பொருட்களை எண்ணும் இடங்களில் வருவது

அ) முற்றுப்புள்ளி ஆ) அரைப்புள்ளி

இ) முக்காற்புள்ளி ஈ) காற்புள்ளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கோவலன் - கண்ணகி கதையைச் சேரன்செங்குட்டுவனுக்குக் கூறியவர்

அ) தண்டமிழ்ச்சாத்தன் ஆ) இளங்கோவடிகள்

இ) சீர்த்தலைச்சாத்தனார் ஈ) நாதகுத்தனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. மல்லிகையே வெண்சங்காகக் கொண்டு ஊதுவது

அ) எறும்பு ஆ) வண்டு இ) தும்பி ஈ) பூச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகள்

அ) குமரி, கங்கை ஆ) பஃறுளி, நைல்

இ) பஃறுளி, குமரி ஈ) கங்கை, நைல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. நெடிற்றொடர்க் குற்றியலுகரத்துக்கு எடுத்துக்காட்டு

அ) சோறு ஆ) அழகு இ) பாக்கு ஈ) எஃது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஆசிரியர் பாவலனைப் பாராட்டினார். இச்சொல்லியத்தில் பாராட்டினார் என்பது

அ) அடைமொழி ஆ) எழுவாய்

இ) பயனிலை ஈ) செயப்படுபொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. **வ** என்பது

அ) உயிரெழுத்து ஆ) மெய்யெழுத்து

இ) உயிர்மெய்யெழுத்து ஈ) முதலெழுத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பத்தினிக் கடவுளின் படிமம் செய்வதற்குக் கொண்டுவந்த கல்லை நீராட்டியது

அ) யமுனையில் ஆ) காவிரியில்

இ) வைகையில் ஈ) கங்கையில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. குறிப்புவினைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நல்லன் ஆ) நடந்தாள்

இ) நடந்தவன் ஈ) நடப்பாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. இலக்கியஇன்பம் என்ற பாடத்தில் காவிரியை ஓர் இளமங்கையாக உருவகித்துப் பாடியவர்

அ) பாவேந்தர் ஆ) இளங்கோவடிகள்

இ) காசிஆனந்தன் ஈ) கம்பர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று

அ) அகநானூறு ஆ) திருக்குறள் இ) புறநானூறு ஈ) பரிபாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. குற்றியலுகர எழுத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தி ஆ) து இ) ம ஈ) த

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. மதுரையில் கழகம் அமைத்துத் தமிழை வளர்த்தவர்கள்

அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. ஓர் எழுத்துத் தனித்தோ பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருமாயின் அது

அ) சொல் ஆ) எழுத்து இ) சொற்றொடர் ஈ) சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ஆசிரியர் வரலாறு கற்பித்தார். இதில் **கற்பித்தார்** என்ற செய்வினையின் செயப்பாட்டுவினை வடிவம்

அ) கற்பி ஆ) கற்பிக்கப்பட்டது இ) கற்பிப்பார் ஈ) கற்பித்தது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. நின்றான் என்ற வினைமுற்றின் வினையடி

அ) நின்ற ஆ) நின்றது இ) நில் ஈ) நின்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. தமிழீழத்தின் தேசியப் பறவை செண்பகம். இச்சொல்லியம்

அ) செப்புச்சொல்லியம் ஆ) வினாச்சொல்லியம்

இ) விருப்புச்சொல்லியம் ஈ) வியப்புச்சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பழைய கற்கால மாந்தன் விலங்குகளை வேட்டையாடி அவற்றின் புலாலை உண்டான். பின்னர் தன் உணவைத் தானே உற்பத்தி செய்துகொள்ள முயன்றான். மாந்தன் முதலில் பழகிய விலங்கு நாய். இது வேட்டையின்போது உடன்சென்று அவனுக்கு உதவியது. ஆடு, மாடுகளை வளர்த்தான். அவற்றின் பால், இறைச்சி முதலியவற்றை உணவாகக்கொண்டான். மாந்தநாகரிக வளர்ச்சியில் பழைய கற்காலத்தின் அடுத்த படிநிலையே புதிய கற்காலம் ஆகும். அக்கால மாந்தன் செதுக்கப்பட்ட கூர்மையான கற்கருவிகளைப் பயன்படுத்தினான். அக்காலத்தில் ஏற்பட்ட முதன்மை வளர்ச்சி உணவு உற்பத்தி ஆகும். இப்புதிய கற்காலத்தில்தான் சக்கரமும் உருவாக்கப்பட்டது. அதன் விளைவாகப் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு எளிதாக எடுத்துச் சென்றான். கல்லைத் தீட்டிக் கூராக்கினான். அதற்கு எலும்பு , மரம் முதலியவற்றால் கைப்பிடிகள் பொருத்தினான். பின்னர் உலோகத்தின் பயன்பாடு அறிமுகமானது. முதலில் பயன்படுத்திய உலோகம் செம்பு. புதிய கற்கால முடிவில் செம்பு என்னும் உலோகத்தின் பயனை அறிந்தனர். செம்பினால் பெருமளவு கருவிகளைச் செய்தனர். அத்துடன் சிறு கற்கருவிகளையும் பயன்படுத்தினர். எனவே அக்காலம் செம்புக்கருவிக் கற்காலம் என்று குறிப்பிடப்பட்டது.

1. பழைய கற்காலத்தின் படிநிலை வளர்ச்சி எது?

______________________________________________

______________________________________________

2. முதலில் பயன்படுத்திய உலோகம் எது?

______________________________________________

______________________________________________

3. மாந்தன் எவற்றை வளர்த்தான்?

______________________________________________

______________________________________________

4. நாய் எதற்கு உதவியது?

______________________________________________

______________________________________________

5. எக்காலத்தில் சக்கரம் உருவாக்கப்பட்டது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. புறநானூறு என்ற நூலில் நிறைந்து காணப்படுவன யாவை?

________________________________________

________________________________________

2. எது தமிழர் உடைமை எனக் கண்ணதாசன் கூறுகின்றார்?

________________________________________

________________________________________

3. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய செய்தியைக் கூறும் நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

________________________________________

4. இந்தியா முழுவதும் தமிழ்நாடாக இருந்தபொழுது அதன் பெயர் என்ன?

________________________________________

5. வடநாட்டு அரசர் மீது செங்குட்டுவனுக்கு வஞ்சினம் மூண்டது ஏன்?

________________________________________

6. தமிழ்மேல் ஆணை என்ற பாடலில் கவிஞர் காசிஆனந்தன் எவ்வுணர்வை வெளிப்படுத்துகிறார்?

________________________________________

7. உலகிற் தோன்றி மறைபவரில் மக்கள் மனதில் நிலைத்து நிற்பவர் யார்?

________________________________________

புள்ளிகள் 10

**4) கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

எம்மண்ணுக்காய் நாளும் உழைத்து
இன்னுயிரைவிட்ட எம்மாவீரரே

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ. மெய்யெழுத்துகள் எத்தனை?

______________________________________

ஆ. அவற்றின் வகைகளைத் தருக.

______________________________________

2. பின்வரும் நிறுத்தற்குறிகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

அ. வியப்புக்குறி :- ______________________________

ஆ. இரட்டைமேற்கோட்குறி :- ______________________________

3. சொற்பொருள் தருக.

அயில் :- ________ கணிகன் :- ________

விறலியர் :- ________ தண்மை :- ________

கணை :- ________ பரிதி :- ________

4. உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை ஒவ்வொன்றுக்கும் மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

உடன்பாட்டுவினை :- ________

________

எதிர்மறைவினை :- ________

________

5. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

கரணியப்பெயர் :- ________

இடுகுறிப்பெயர் :- ________

கரணியஇடுகுறிப்பெயர்:- ________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

பள்ளி என்பது பாடநூல்களைக்கொண்டு அறிவை வளர்க்கும் இடம். ஆனால் நூலகம் அந்த அறிவை மேலும்மேலும் வளர்த்துக்கொள்ள உதவும் இடமாகும். இதனால்தான் அனைத்துப் பள்ளிகளிலும் நூலகம் உள்ளன. நூலகத்தில் உள்ள நூல்களைக் கிழியாமலும் பழுதாகாமலும் பாதுகாத்தல் எமது கடமையாகும். அவை அடுத்தவருக்கும் பயன்பட உதவியாக இருக்கும். வாழ்வில் வெற்றிபெற நூலகங்களைப் பயன்படுத்துவோம். அறிவு வளரவும் ஆற்றல் வளரவும் நூல்களைப் பேணிக்காக்கும் நூலகங்களைக் காப்போம்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ★ தமிழுக்கே வாழ்வு.
- ★ கடல்கொண்ட தமிழகம்.
- ★ புலம்பெயர் நாட்டில் தமிழ்க் கல்வி.

புள்ளிகள் 20